காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்து, 250 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், நகரச் செயலாளர்கள் கோ.சத்தியமூர்த்தி, பட்டூர் எஸ்.ஐபருல்லா, ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தலைமையில் நேற்று (10.04.2025) கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட அரசு மருத்துவ கட்டடங்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். உடன் பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் த.மனோ தங்கராஜ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் உட்பட பலர் உள்ளார்கள்.

கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட

மலைக் கிராம மக்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத் தொகையை உயர்த்திடுவீர்!

மக்களவையில் – தே.மலையரசன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஏப். 11- கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட ஏற்காடு,பச்சமலை, நெய்யமாலை, அரனூற்றுமாலை, வெள்ளிமலை, கல்வராயன்மலை, மற்றும் கருமந்துறை, ஆகிய மலைப்பகுதியில் வாழும் மலைவாழ் கிராம மக்களுக்காக மத்திய அரசின் சார்பில் வழங்கும் (prime minister)PMAY திட்டத்தின் கீழ் வீடுகளை வழங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தத் தொகை 2,78,460 ரூபாய் மலைவாழ் மக்களுக்கு போதுமானதாக இல்லாததால் அதனை உயர்த்தி தரக் கோரியும் நமது முதல்வர் திராவிட மாடல நாயகர் எல்லோருக்கும் எல்லாம் என்ற கோட்பாட்டு தலைவர் அவர்களது நல்லாட்சி தமிழகத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 5,35,140 ரூபாய் மலைவாழ் மக்களுக்கு கொடுக்கப்படுகிறது என்பதையும் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

ஆண்டிப்பட்டி பகுதியில்

போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த புறவழிச் சாலை அமைக்க வேண்டும்!

சட்டப்பேரவையில் – மகாராஜன் எம்.எல்.ஏ. கோரிக்கை!

தேனி, ஏப். 11- ஆண்டிபட்டி நகர் பகுதியில் தினந்தோறும் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து உள்ளதால் அதனை கட்டுப்படுத்த புறவழிச்சாலை அமைக்க வேண்டும் என்று சட்டமன்ற கூட்டத்தொடரில் ஆண்டிபட்டி எம்.எல்.ஏ. மகாராஜன் கோரிக்கை வைத்து பேசினார்.

தமிழ்நாடு சட்டப் பேரவை கூட்டத்தொடரில் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் பேசுகையில்,

தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி நகர் பகுதி மதுரை கொச்சின், எர்ணாகுளம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மதுரை, ராஜபாளையம், திருநெல்வேலி, கன்னியா குமரி மற்றும் கம்பம், போடி, கேரளா மாநிலத்தில் உள்ள மூணாறு எர்ணாகுளம், கொச்சின் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும் வாகனங்கள் இந்த ஆண்டிபட்டி நகர் பகுதி வழியாகத்தான் சென்று வருகிறது. ஆண்டிப்பட்டி நகரில் சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

ஆண்டிப்பட்டி நகரில் சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சாலை மிகவும் போக்குவரத்து நெரிசலுடன் காணப்படுகிறது. இந்த சாலை வழியாக சுமார் 10க்கும் மேற்பட்ட தனியார் மண்டபங்கள், பள்ளிகள், வங்கிகள், வணிக வளாகங்கள் உள்ளிட்டவை அமைந்துள்ளது. முகூர்த்த காலங்களில் ஆண்டிபட்டி நகர் பகுதியில் உள்ள சாலை மிகுந்த போக்குவரத்து நெரிசலுடன் காணப்படுகிறது.

இதனால் தொடர்ந்து விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் உருவாகியுள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் பள்ளிகள், அலுவலகங்கள் மற்றும் வேலைகளுக்கு சென்று வருபவர்என பலரும் ஆண்டிபட்டி நகர் வழியே பயன்படுத்துவதால் அதிகளவு போக்குவரத்து நெரிசல் உள்ளது. இந்த போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்கு ஆண்டிபட்டி பகுதியில் புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்ததுடன் இந்த புறவழிச் சாலை திட்டம் எப்போது தொடங்கப்படும் என்றும் சட்டப் பேரவையில் எம்.எல்.ஏ. மகாராஜன் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியபோது, புறவழிச் சாலை அமைப்பது தொடர்பாக எம்.எல்.ஏ. மகாராஜன் விளக்கமாக கடிதம் அளித்தால் வருங்காலத்தில் ஆண்டிபட்டி புறவழிச்சாலை அமைப்பது குறித்து முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

வக்ஃப் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யக்கோரி,

அகில இந்திய நீதித்துறை சங்கம் சார்பில் மேலும் ஒரு வழக்கு!

புதுடெல்லி, ஏப். 11 - ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் வக்ஃப் சட்டத் திருத்த மசோதாவை கொண்டு வந்து நிறைவேற்றியது. இந்த சட்டத் திருத்தத்திற்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதனிடையே, வக்ஃப் சட்டத்தை ரத்து செய்யக் கோரி அகில இந்திய நீதித் துறை சங்கம் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மூத்த வழக்கறிஞர்கள், முன்னாள் நீதிபதிகள், நீதித்துறை சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக உள்ள இச்சங்கம் தாக்கல் செய்துள்ள மனுவில், வக்ஃப் திருத்த சட்டம், நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளின் மீறும் வகையிலும், அரசியல் சாசனத்திற்கு எதிராகவும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வக்ஃப் திருத்த சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது. இதனிடையே, வக்ஃப் சட்ட திருத்தத்தை ரத்து செய்யக் கோரி காங்கிரஸ், தி.மு.க., ஆம் ஆத்மி, முஸ்லீம் லீக், மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் 20க்கும் மேற்பட்ட வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் அனைத்தும் வரும் 16ம் தேதி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு முன் விசாரணைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயில் அறுபத்து மூவர் திருவிழாவை முன்னிட்டு மயிலாப்பூர் முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவில் உள்ள பகுதி பொருளாளர் அலுவலகத்தில் எல்.உதயகுமார் தலைமையில் இவ்விழாவில் மாவட்ட கழக செயலாளரும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமான மயிலை த.வேலு அன்னதானம் வழங்கினார், உடன் கிழக்குப்பகுதி செயலாளர் எஸ்.முரளி, வட்ட செயலாளர்கள் மா.பா.அன்பு, தாஸ், அருண் ராமஜெயம், கே.பாலகிருஷ்ணன், கே.சி.ஜெயக்குமார், ஆர்.ரமேஷ், டி.தினகர், எஸ்.மோகன், லைன் கே.குமார். பிரகாஷ் பழனி, ஆர்.இளவரசன் பி.யமுனா ராஜன், வி.மணிகண்டன், எஸ்.நாகராஜ், எஸ்.விஜயகுமார், ஜி.தர்மா, ஆட்டோ சங்கர், எஸ்.ஹரிபாபு, என்.பிரேம் ஆனந்த் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சிவகிரி முரசொலி முகவர் ஜி.எஸ்.எஸ்.நல்லசிவன்

பெரிய தாயார் எஸ்.அருணாசல வடிவு மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

தென்காசி, ஏப். 11 - தென்காசி வடக்கு மாவட்டம் சிவகிரி முரசொலி முகவரும் மாவட்ட பிரதிநிதியுமான முனைவர். G.S.S.நல்லசிவன் மற்றும் பம்மல் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் எஸ்.சுந்தர்ராஜ் ஆகியோர்களின்பெரியதாயார் திருமதி. எஸ். அருணாசலவடிவு 8.4.2025 அன்று இரவு 10.50 மணிக்குஇயற்கைஎய்தினார். 'மாவட்டஒன்றியபேரூர் கழக தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

கல்வராயன் மலை வட்டம் –

வெள்ளிமலையில் - அரசு 'சுற்றுலா மாளிகை' கட்ட வேண்டும்!

சட்டப்பேரவையில் – தா. உதயசூரியன் வலியுறுத்தல் !

சென்னை, ஏப்.11- சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது பேசிய கழக உறுப்பினர் தா. உதயசூரியன்,"கல்வராயன் மலை வட்டம் - வெள்ளி மலையில் 'அரசு சுற்றுலா மாளிகை' கட்டித் தாரீர்!" என வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

தா. உதயசூரியன்: கல்வராயன் மலை வட்டம், வெள்ளிமலையில் சுற்றுலா மாளிகை கட்ட அரசு முன்வருமா? ஆம் எனில், எப்போது?

அமைச்சர் எ.வ.வேலு: இவ்வாண்டு மானியக் கோரிக்கையில் கல்வராயன் மலை வட்டம், வெள்ளிமலையில் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆய்வு மாளிகை கட்டப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆண்டே அந்த ஆய்வு மாளிகை கட்டப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தா. உதயசூரியன்: திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்று மாநில சுயாட்சி. நாங்களெல்லாம் பள்ளி படிக்கின்ற காலத்தில், (மணியடிக்கப்பெற்றது) மாநில சுயாட்சி என்று சொன்னால், அடைந்தே தீருவோம் என்று சொல்கின்ற வகையில், இன்றைக்கு மாநில சுயாட்சியைப் பெற்றுத் தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் கேட்ட கேள்வி, சுற்றுலா மாளிகை குறித்தது. இப்போது ஆய்வு மாளிகையாக அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு அறைகள் என்று கேள்விப்பட்டேன். கூடுதலாக இரண்டு அறைகள் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

அமைச்சர் எ.வ. வேலு: முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, பொதுப் பணித் துறையின் சார்பில் ஒரு Circuit house கட்டித் தர வேண்டுமென்றுதான் அவர் என்னிடத்தில் கேட்டார். இன்றைக்கு இருக்கிற நிதி நிலைமையை வைத்து, முதலமைச்சர் அவர்களிடம் தனி கவனம் செலுத்தியிருக்கிறோம். ஏனென்றால், இப்போது இருக்கிற நிலையில் பெரும்பான்மையாகக் கொடுப்பதற்கு வாய்ப்பு மிக குறைவு. மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்குத்தான் தற்போது நேரம் சரியாக இருக்கிறது. நிதியும் அப்படியே இருக்கிறது.

முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றேன். ஏனென்றால், காடுகளிலும், மலைகளிலும் கழகத்தை வளர்த்தவர், கள்வராயன் மலையின் உச்சிக்கு சென்றவர் என்றெல்லாம் சொல்லித்தான் இந்த அனுமதியைப் பெற்று, ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு Taluk office இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற நீங்கள் செல்லலாம்; மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செல்லலாம்; இருக்கிற அறைகளை பயன்படுத்தினாலே போதும். வருங்காலங்களில் நிதிநிலைக்கேற்ப, முடிந்தால் கூடுதல் அறைகள் கட்டித் தரப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தா. உதயசூரியன்: கரியாலூரில் வனத் துறைக்குச் சொந்தமான ஒரு பயணியர் விடுதியும், 30 கிலோ மீட்டருக்கு பக்கத்தில் இருக்கிற சேராப்பட்டியில் வனத் துறைக்குச் சொந்தமான பயணியர் விடுதியும் இருக்கிறது. அதைத் தான் இவ்வளவு நாட்களாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தோம். அதில், சேராப்பட்டியில் வனத் துறைக்குச் சொந்தமான பயணியர் விடுதி பழுதடைந்திருப்பதால், அதனை பயன்படுத்துவதற்கு வாய்ப்பில்லை. ஆகையால்தான் கூடுதலாக இரண்டு அறைகள் கேட்டேன். அதோடு எங்கள் மாவட்டத்தையொட்டியுள்ள விழுப்புரம், கள்ளக்குறிச்சிக்கிடையே இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலையில் அரசூர் என்கிற ஊரில் ஏற்கெனவே நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான ஒரு பயணியர் விடுதி பழுதடைந்துள்ளது. சுற்றுச்சுவர் இல்லாமல் இருக்கிறது.

ஆகவே, நெடுஞ்சாலை வழியாகச் செல்கிறபோது, உளுந்தூர்பேட்டை சென்றாலும், திருச்சி, மதுரை போன்ற இடங்களுக்கு செல்கின்றபோது, அங்கே அரசு அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் தங்குவதற்கு இந்த அரசு விடுதி பயனுள்ளதாக இருக்கும்.

ஃபெஞ்சல் புயல் பாதிக்கப்பட்டபோது, அமைச்சர் அவர்கள், 13 கிராமங்கள் பாதிக்கப்பட்டபோது, பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாகவே வருகை தந்து, அங்கே ஆய்வு செய்து, அந்த மக்களுக்கெல்லாம் உதவி செய்தார்கள். ஆகவே, அவருக்கும் அதுகுறித்து தெரியும். அந்த அரசூர் பயணியர் விடுதியைப் புதுப்பித்துத் தந்து அல்லது புதியதாக கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

அமைச்சர் எ.வ. வேலு: அவர் குறிப்பிட்ட அந்த சேராப்பட்டியில் இருக்கிற விடுதி வனத் துறைக்குச் சொந்தமானது.

வனத் துறை அமைச்சரே என் பக்கத்தில்தான் உட்கார்ந்திருக்கிறார். அவர் பக்கத்திலே நான் தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். எனவே, அவரிடத்திலே சொல்லி அதை சீரமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு இந்த துறையின் சார்பாக நாம் கேட்டுக் கொள்வோம். அதே போன்று அவர் சொன்ன அரசூர் என்பது ஒரு நான்கு மூலை junction உள்ள ஒரு பகுதி. அதை அவரும், நானும் நேரடியாக பார்த்தோம். இந்த நிதி யாண்டிலேயே புதிதாக கட்டுவதற்கு வாய்ப்பு குறைவு. இந்த நிதியாண்டிலேயே அரசூர் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான அந்த ஆய்வு மாளிகைகள் சீர் செய்யப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க.இளைஞரணி அமைப்பாளர் கோ.பிரவீன்குமார் சகோதரர் கோ.சதீஷ்குமார் மறைவுக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் இறுதி அஞ்சலி செலுத்தினர். உடன் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, பகுதி செயலாளர்கள் ப.குணாளன், என்.சந்திரன் எம்.சி., படப்பை மனோகரன், ஆர்.கே.நகர் தனசேகரன், ஜெயக்குமார், ஜி.கே.ரவி, கோல்டு பிரகாஷ், மற்றும் நிர்வாகிகள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி

ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

திராவிட முன்னேற்ற கழக பொறியாளர் அணி

மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமை! மாநில செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் நாளை (12.4.2025 - சனிக்கிழமை) அன்று மாலை 04.00 மணி அளவில் மேலப்பாளையம், மாவட்ட கழக அலுவலகம் (அம்பாசமுத்திரம் ரோடு, ரிலையன்ஸ் பல்க் அருகில்) நடைபெற உள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய/ நகர/ பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODEமூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் QR CODEமூலம் விண்ணப்பம் செய்தவர்கள் மட்டும் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடு செய்து தாங்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.கே.பி. கருணா
செயலாளர், தி.மு.க. பொறியாளர் அணி